உற்பத்திக்காக சிறிது கொடுப்பதாகச் சொன்னார்களே தவிர, க்ரிட் மெயின்டெயின் செய்யக் கொடுக்கிறார்கள், நமக்குத் தேவையான மின் சாரம் கிடைக்கும் வாய்ப்பு, மற்ற மாநிலங்களில் இருந்து கிடைக்கும் வாய்ப்பில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்களின் விளக் கத்திற்குப் பிறகு இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு தேவையில்லை என நான் கருதுவதால் இதற்கு என் அனுமதியை மறுக்கிறேன்.

5. அமைச்சர் அறிக்கை.

சென்னை துறைமுகத்திற்கு வந்த சீன மீன்பிடிக் கப்பல்கள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்த அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு முதல் அமைச் சர் அவர்கள் விதி 82-ன் கீழ் இந்தப் பேரவைக்கு ஒரு அறிக்கை அளிப் பார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, 1—4—1975 அன்று சட்டமன்ற விவாதத்தின்போது திரு. வீராசாமி அவர்கள் பின்வரும் பிரச்னையை எழுப்பினார்கள்.

"தமிழகத்தினுடைய எல்லையிலே, கடற்கரையிலே குவாங் ஜான்–3, குவாங் ஜான்–2 என்ற இரண்டு கப்பல்கள் வந்திருப்பதாகவும் அதிலே 36 சீனர்கள் வந்திருக்கிறார்கள் என்றும் செய்தி வந்திருக் கிறது. அந்தக் கப்பல்களிலே எலக்ட்ரானிக் இயந்திரங்கள் எல்லாம் வைத் திருப்பதாகச் சொல்கிறார்கள். இதனால் நாட்டுக்கு ஆபத்து வருமோ என்ற அச்சம் வந்திருக்கிறது. இதுபற்றி ஏதாவது தகவல் அரசுக்கு வந்திருக் கிறதா?" என்று கேட்டார். அதற்கு நான் பதில் அளிக்கையில், "மத்திய சர்க்காருடைய காவல் துறையினர் நடவடிக்கை எடுத்து அவர்களை எல் லாம் பிடித்து வைத்திருக்கிறார்கள். போலீஸார் நடவடிக்கை எடுப்பதாக இருந்தாலும் கூட ஆந்திர மாநிலம்தான் இதில் தலையிட்டு நடவடிக்கை எடுக்கவேண்டியிருக்கிறது. அவ்வளவுதான் அதைப்பற்றிச் சொல்ல முடி யும்" என்று கூறினேன். மேலும் இதுபற்றி தெரிய வருவது: கடற்கரைமீது 12 மைல் தொலைவு வரை பிரதேச கடல் எல்லை (டெரிட்டோரியல் வாட்டேர்ஸ்) நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த மீன் பிடி கப்பல்கள் இரண்டும் ஆந்திரப் பிரதேச கடற்கரையில் இருந்து ஆந்திரப் பிரதேச நெல்லூர் மாவட்டத்திலுள்ள கிருஷ்ணபட்டினம் என்ற கடற்கரை ஊரிலிருந்து 6·2 மைல் தொலைவில் பிடிக்கப்பட்டது. எனவே இது பிரதேச கடல் எல்லைக்குட்பட்டது என்ற கருத்தில் ஆந்திர மாநில காவல் துறையினர் நடவடிக்கை எடுப்பார்கள் என்று கருதப்பட்டு இந்த அவை யிலும் அறிவிக்கப்பட்டது.

[டாக்டர் மு. கருணாநிதி] [1975 ஏப்ரல் 10

(முற்பகல் 10-30)

இந்த மீன் பிடி கப்பல்களை வட்டம் இட்டு இந்திய கப்பற் படையினர் இவற்றை சென்னை துறைமுகத்திற்குக் கொண்டு வந்தனர். சென்னை துறைமுகத்திற்குக் கொண்டுவந்ததற்குக் காரணம் கப்பல் பிடிபட்ட இடத்திலிருந்து அருகில் உள்ள துறைமுகம் சென்னைதான். அதாவது 70 மைல் தொலைவு. ஆனால் ஆந்திர மாநிலத்திலுள்ள விசாகப்பட்டிணம் துறைமுகம் மீன்பிடி கப்பல்கள் பிடிபட்ட இடத்திலிருந்து 380 மைல் தூரம் உள்ளது. சென்னை துறைமுகத்திலிருந்து மறுபடியும் விசாகப் பட்டிணம் துறைமுகத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்றால் 450 மைல் தூரம் உள்ளது. எனவே, இந்தக் கப்பல்களை சென்னை துறைமுகத்திலேயே பாதுகாப்பில் வைக்கவேண்டுமென்று இந்தியக் கப்பற்படை முடிவு செய்தது.

மேலும் மீன்களை விற்பனை செய்வது, மாலுமிகளைக் கண்காணிப்பது, அதையொட்டி மேலும் பல பணிகளையும் தமிழக அரசே மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இதைத் தொடர்ந்து தக்க மொழி பெயர்ப்பாளர்களைக் கொண்டு மீன்பிடி கப்பல்காரர்களை விசாரணை செய்த பிறகு கடற்படை அதிகாரிகள், சட்ட ஆலோசகர்கள் மற்றும் அரசு வழக்குரைஞர்கள் ஆகியவர்களைக் கலந்து ஆலோசித்ததில் வெளிநாட்டினருக்கான சட்டம், மற்றும் அனுமதி வழங்கும் விதிகளின்கீழ், தமிழக சென்னை நகர காவல் துறை இதில் நடவடிக்கை எடுக்கலாம் என அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டதின் பேரில் தமிழக காவல் துறையே, குறிப்பாக சென்னை நகர காவல் துறை ஆணையாளரே மேல் நடவடிக்கை எடுக்கலாம் என அரசு கருதுகிறது.

எனவே, 1946-ஆம் ஆண்டு வெளிநாட்டினருக்கான சட்டம் 3(2)(எ) பிரிவு, மற்றும் 14-வது பிரிவின்கீழ் வழக்கு தொடர வேண்டும். அதாவது இந்தப் பிரிவின்படி "அனுமதியில்லாமல் குறிப்பிட்ட மார்க்கத்திலோ, துறைமுகத்திலோ வெளிநாட்டினர் செல்லக்கூடாது". இப் பிரிவின் கீழ் அவர்கள் மீது சென்னை நகர காவல்துறை அதிகாரி நடவடிக்கை எடுப்பார் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. தகவல் கோரல் —தொடர்ச்சி.

(ஆ) சிக்கிம் இந்திய யூனியனில் அசோசியேட் உறுப்பினராகச் சேருவது பற்றியச் அரசியலமைப்பு சட்டத் திருத்தம் மீது விரோதம் நடத்தாதது குறித்து.

*திரு. என். கே. பழனிசாமி: தலைவரவர்களே,

Under rule 142 (c), I raise a point of order.